

වාර්ෂික කාර්ය සාධන වාර්තාව - 2022

வருடாந்த செயற்றிறன் அறிக்கை - 2022

Annual Performance Report of the Year - 2022

ව්‍යාපෘති කළමනාකරණ හා අධීක්ෂණ දෙපාර්තමේන්තුව

கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களம்

Department of Project Management and Monitoring

වැය ශීර්ෂ අංක 280

செலவினத் தலைப்பு : 280

Expenditure Head No: 280

2022 வருடத்திற்கான செயற்றிறன் அறிக்கை

கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களம்

செலவினத் தலைப்பு இல : 280

அத்தியாயம் 01 – நிறுவன விபரம்/ செயற்படுத்தல் பொழிப்பு

அத்தியாயம் 02 – முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு

அத்தியாயம் 03 – ஒட்டுமொத்த வருடாந்த நிதிச் செயற்பாடு

அத்தியாயம் 04 – செயற்றிறன் குறிகாட்டிகள்

அத்தியாயம் 05 – நிலையான அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடைந்து கொள்வதற்கான செயற்றிறன்

அத்தியாயம் 06 –மனிதவளவிபரம்

அத்தியாயம் 07 - இணக்கப்பாட்டு அறிக்கை

அத்தியாயம் 01 நிறுவன விபரம்/ செயற்படுத்தல் பொழிப்பு

1.1 அறிமுகம்

துரித அபிவிருத்தி முயற்சிகளுக்கு சமாந்தரமாக மற்றம் அரச முதலீட்டு உபாயமார்க்கத்திற்கு அமைவாக இலங்கை பூராகவும் செயற்படுத்தப்படுகின்ற அபிவிருத்தி கருத்திட்டங்களிலும் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களிலும் எதிர்பார்க்கப்பட்ட பயன்களை உரிய நேரத்திலும் உரிய கிரயத்திலும் அடைந்துகொள்வதற்காக விஷேட கவனம் செலுத்துவது அவசியமாகும். எனவே, கருத்திட்டங்களை செயற்படுத்தும் போது ஏற்படும் தடைகளை விலக்குவது தொடர்பாக உரிய காலத்தில் தர்க்கரீதியான மற்றும் அறிவுப்பூர்வமான தீர்மானங்களை எடுப்பதற்கு ஏற்ற வகையில் அக்கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றங்களை உரிய தரப்பினருக்கு அறிக்கையிடுவது போன்றே வசதிகளை ஏற்படுத்துவதும் அவசியமாகும். ஆகவே, பொது முதலீடுகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ள வளங்கள் வினைத்திறனுடனும் பயனுறுதிமிக்க முறையிலும் அமுல்படுத்தப்படுவதை உறுதிபடுத்துவதற்கு பொது நிதியியல் முகாமைத்துவத்தில் கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு செயற்பாடு மிக முக்கியம் பெறுகின்றது. இம் முக்கிய இலக்குகளை அடைந்து கொள்வதற்காக கருத்திட்டங்களை சீராகவும் விரைவாகவும் செயற்படுத்துவதற்கு உரிய கண்காணித்து அறிவுரைகள் மற்றும் வசதிகளை பெற்றுக்கொடுத்தல் கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது.

1.2 நிறுவனத்தின் தொலைநோக்கு, பணிக்கூற்று மற்றும் குறிக்கோள்

தொலைநோக்கு

செயற்றிறன்மிக்க அபிவிருத்தியை நோக்கி

பணிக்கூற்று

எதிர்பார்க்கப்படும் அபிவிருத்தி பெறுபேறுகளை அடைந்துகொள்வதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக அனைத்து அபிவிருத்தி கருத்திட்டங்களையும் கண்காணித்தல், மதிப்பீடு செய்தல் மற்றும் வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தல் போன்றே அவற்றை நடைமுறைப்படுத்தும் நிறுவனங்களுக்கு அறிவுரைகளை வழங்குதல்.

குறிக்கோள்

வளங்களை உத்தம மட்டத்தில் பயன்படுத்துவதனூடாக ஒப்புக்கொள்ளப்பட்ட கால எல்லை மற்றும் செலவின மதிப்பீட்டிற்குள் எதிர்பார்த்த அபிவிருத்தி பெறுபேற்றை உருவாக்குதலை அதிகரித்தல்.

1.3 பிரதான செயற்பாடுகள்

1. வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நிதியீட்டத்தின் கீழ் அமல்படுத்தப்படும் அபிவிருத்தி கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் தகவல்களை சேகரித்தல், ஆய்வு செய்தல் மற்றும் கண்காணித்தல்.
2. பாரிய மற்றும் விசால அளவிலான கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் செயற்றிறனை காலாண்டு அடிப்படையில் மீளாய்வு செய்து அமைச்சரவைக்கு அறிக்கையிடுதல்.
3. பாரிய அளவிலான அபிவிருத்தி கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களில் காணப்படும் பிரச்சினைகளை தீர்த்தல்.

4. வெளிநாட்டு நிதியீட்டத்தின் கீழ் செயற்படுத்தப்படும் அபிவிருத்தி கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்ற மீளாய்விற்காக அபிவிருத்திப் பங்காளர்களுக்கு வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தல்.
5. தெரிவு செய்யப்பட்ட வெளிநாட்டு நிதியுதவியுடனான கருத்திட்டங்களின் பெறுபேறுகளை அடைந்துகொள்வதன் முன்னேற்றத்தை சரிபார்த்தல் மற்றும் நிதியுதவி வழங்கும் நிறுவனங்களுக்கு அக்கடன் தவணைகளை விடுவிக்கக் கூடிய வகையில் கருத்திட்டங்களை செயற்படுத்துவதன் முன்னேற்றங்களை உறுதிப்படுத்துதல்.
6. தேசிய மதிப்பீட்டு கொள்கையை அமுல்படுத்துவதற்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.
7. பல்வேறு தரப்பினராலும் மேற்கொள்ளப்படும் வேண்டுகோள்களின் அடிப்படையில் கருத்திட்ட மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல் மற்றும் அதனூடாக திட்டமிடல் செயற்பாடுகளுக்கு பரிந்துரைகளை வழங்குதல்.
8. அபிவிருத்தி கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்ற அறிக்கைகளை வெளியிடுவதன் மூலம் அபிவிருத்தி தகவல்களை பரப்புதல்.

1.4 நிறுவன கட்டமைப்பு (இணைப்பு – 1)

1.5 திணைக்களத்தின் பிரதான பிரிவுகள்

07 தொழிநுட்பப்பிரிவுகள் மற்றும் 03 உதவிச்சேவை பிரிவுகள் உள்ளடங்களான கருத்திட்டமுகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களமானது பணிப்பாளர் நாயகம் மற்றும் ஐந்து மேலதிகபணிப்பாளர் நாயகங்கள் ஆகியோரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் பின்வருமாறு கட்டமைக்கப்பட்டுள்ளது.

தொழிநுட்பப்பிரிவுகள்

i. கைத்தொழில் மற்றும் நிதி
ii. நீர்விநியோகம் மற்றும் மின்சக்தி
iii. விவசாயம் மற்றும் நீர்ப்பாசனம்
iv. கல்வி மற்றும் சுகாதாரம்
v. நகர்புற, மாகாண மற்றும் பிராந்திய அபிவிருத்தி
vi. போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை
vii. அரச நிர்வாகம்

உதவிச்சேவை பிரிவுகள்

i. நிர்வாகம்
ii. நிதி
iii. கணினி தொழிநுட்பம்

அத்தியாயம் 02 – முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு

2.1 அபிவிருத்தி கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் கண்காணிப்பு மற்றும் அறிக்கையிடல்.

அபிவிருத்தி கருத்திட்டங்களின் கண்காணிப்பு, வருடம் முழுவதும் இத்திணைக்களத்தினுள் செயற்படுத்தப்படும் ஒரு பிரதான பணியாவதுடன் அம் முன்னேற்றங்கள் தொடர்பாக கொள்கை வகுபாளர்களுக்கு தெரியப்படுத்தும் செயற்பாடு காலாண்டு அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது. கொவிட் - 19 வைரஸ் தொற்று முடிவுக்கு வருகின்ற போதும் நெருக்கடி வாய்ந்த பொருளாதார நிலைமையின் கீழ் உருவாகிய சிக்கலான பிரச்சினைகளின் முன் 2022ம் ஆண்டில் ஏற்பட்ட எரிபொருள் பற்றாக்குறையினால் ஏற்பட்ட போக்குவரத்து சிரமங்களினால் நிகழ்நிலை முறைமைக்கமைய வீட்டிலிருந்து பணியாற்றியமையின் காரணமாக 2022ம் வருடத்தினுள் அபிவிருத்தி கருத்திட்டங்களின் கண்காணிப்பானதுதிணைக்களத்திற்கு சவாலாக காணப்பட்டது. அச்சவாலுக்கு மத்தியிலும் திணைக்களத்தினால் 2022ம் வருடத்திற்கு திட்டமிடப்பட்டிருந்த முன்னேற்ற கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அது தொடர்பான பரிந்துரைகள் உள்ளடங்கிய முதலாவது, இரண்டாவது, மூன்றாவது மற்றும் நான்காவது காலாண்டுகளுக்குறிய முன்னேற்ற அறிக்கைகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு பரிந்துரைகளுடன் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்க முடிந்தது.

2022ம் வருடத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதியுதவியின் கீழ் பல்வேறு நிரல் அமைச்சுக்களின் கீழ்நடைமுறைப்படுத்தப்பட்ட பெரிய மற்றும் பாரிய அளவிலான அபிவிருத்தி கருத்திட்டங்களின் எண்ணிக்கை 261 ஆவதுடன், அதில் பாரிய அளவிலான கருத்திட்டங்கள் 150ம் பெரியளவிலான கருத்திட்டங்கள் 111ம் அடங்குகின்றன. இவ் 261 கருத்திட்டங்களும் 23 அமைச்சுக்களினூடாக செயற்படுத்தப்படுவதுடன் அவ் அமைச்சினூடாக மாதாந்தம் கருத்திட்டங்களை செயற்படுத்தும் அபிவிருத்தி தரவுகள் பெற்றுக்கொள்ளப்படுகின்றது. இப்பாரிய மற்றும் பெரியளவிலான கருத்திட்டங்களுள், 138 கருத்திட்டங்கள் உள்நாட்டு நிதி மற்றும் கடன்களினூடாகவும் மற்றும் 123 கருத்திட்டங்கள் வெளிநாட்டு கடன் மற்றும் நன்கொடைகளுடாகவும் நிதியீட்டம் செய்யப்பட்டுள்ளன.

இருதரப்பு நிதி வழங்குனரினால் நிதி வழங்குதல் தற்காலிகமாக நிறுத்தப்பட்டமை,மூலதன நிதிப்பாய்ச்சலினை பொது மக்களின் அடிப்படை தேவைகளை நிறைவு செய்வதனை குறிக்கோளாகக் கொண்டு மீண்டுவரும் செலவுகளுக்காக பயன்படுத்தவேண்டி ஏற்பட்டமை, நாளாந்த மின்வெட்டு, நாட்டினுள் உருவாகிய அந்நிய செலாவணி நெருக்கடியினால் ஏற்பட்ட இறக்குமதி கட்டுப்பாடு மற்றும் அதனால் ஏற்பட்ட மூலப்பொருள் பற்றாக்குறை, எரிபொருள் பற்றாக்குறை போன்றே உற்பத்தி செலவினம் அதிகரித்தமை ஆகிய இடையூறுகளுக்கு மத்தியிலும், 2022ம் வருடத்தின் நான்காவது காலாண்டு இறுதியாகும் போது நிறைவுசெய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த 109 கருத்திட்டங்களுள் 29 கருத்திட்டங்கள் மாத்திரமே இறுதி கருத்திட்ட பெறுபேறுகளை உருவாக்கிக்கொள்ள முடிந்துள்ளது.மேலும், செயற்றிறன் சிக்கல்கள் காரணமாக 29 பாரியளவிலான கருத்திட்டங்கள் வருடத்தின் இறுதியாகும் போது இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

அட்டவணை இல 2.1:மொத்த மதிப்பீட்டு செலவுக்கு அமைய கருத்திட்டங்களை வகைப்படுத்தல்

மொத்த மதிப்பீட்டு செலவுக்கு அமைய பாரிய அபிவிருத்தி கருத்திட்டங்களை வகைப்படுத்தல்						
மதிப்பிடப்பட்ட கருத்திட்ட பெறுமதி (ரூ.மில்.)	1000-15000	15001-30000	30001-45000	45001-60000	60000க்கு அதிகம்	மொத்தம்
கருத்திட்ட எண்ணிக்கை	179	41	18	9	14	261
வெளிநாட்டு	66	29	15	5	8	123
உள்நாட்டு	113	12	3	4	6	138

முன்னேற்றங்களை கண்காணிக்கும் செயற்பாடுகளின் போது தரவுகளை சேகரிப்பதில் பிரதான ஊடகமாக காணப்பட்ட திணைக்களத்தில் நிறுவப்பட்டுள்ள தேசிய அபிவிருத்தி தகவல் அமைப்பினை (NDIS) புதிய தொழிநுட்பங்களை பிரயோகித்து புதுப்பிப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் ஒப்பந்தகாரரின் பலவீனமான செயற்றிறன் காரணமாக இடையில் நிறுத்தப்பட்டதனால் 2022ம் வருடத்திலும் கருத்திட்ட மீளாய்வுகள், அறிக்கையிடல்,ஒருங்கிணைத்தல் மற்றும் செயற்படுத்தும் போது ஏற்படும் பிரச்சினைகளை உரிய தரப்பினருடன் தொடர்புகொண்டு தீர்த்துக்கொள்வதற்காக விஷேட பிரயத்தனம் எடுக்கவேண்டி ஏற்பட்டது. இந்நிலைமையினை தவிர்த்துக்கொள்வதற்காக தேசிய ஒருங்கிணைந்த அபிவிருத்தி தகவல் அமைப்பினை (INDIS) மீண்டும் புதுப்பித்துக்கொள்வதற்கான சாத்தியப்பாடு தொடர்பாக சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவர் நிறுவனத்துடன் (USAID) 2022 ம் வருடத்தில் கலந்துரையாடப்பட்டது.

முன்னேற்ற மீளாய்வு செயற்பாட்டின்போது இணங்காணப்பட்ட சில கருத்திட்டங்களில் காணப்பட்ட பிரச்சனைகளை தீர்ப்பதற்கு விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது. அதனால், கருத்திட்டங்களின் உண்மையான நிலைமைகளை கண்டறிவதற்காக நிரல் அமைச்சுகளினால் வழங்கப்படும் மாதாந்த மற்றும் காலாண்டு அறிக்கைகள் மற்றும் உரிய தரப்பினருடன் நடாத்தப்படும் கருத்திட்ட செயற்றிறன் கூட்டங்கள் மட்டும் போதுமானதாக இல்லாதிருப்பதுடன், கள விஜயங்களை மேற்கொள்ளுதலினூடாக பெற்றுக்கொள்ளப்படும் அவதானிப்புக்கள் மிக முக்கியமானதாகும். அதற்கமைய, இத்திணைக்களத்தினால் ஒவ்வொரு வருட ஆரம்பத்திலும் ஒவ்வொரு துறைகளின் கீழும் கள விஜய திட்டம் தயாரிக்கப்படும். எவ்வாறாயினும்,நாடு முகங்கொடுத்த பொருளாதார நெருக்கடியினால் 2022ம் வருடத்தில் ஏற்பட்ட எரிபொருள் பற்றாக்குறையின் காரணமாக ஏற்பட்ட போக்குவரத்து சிரமங்களினால் அவ்வருடத்திற்கு திட்டமிடப்பட்டிருந்த களவிஜயங்களில் அரைவாசியினை விடவும் குறைந்தளவு மட்டுமே மேற்கொள்ளக்கூடியதாக இருந்துள்ளது. அதற்கமைய திட்டமிடப்பட்ட 115 களவிஜயங்களில் அனைத்து துறைகளும் உள்ளடங்க கூடிய வகையில் பன்னிரண்டு கள விஜயங்களினூடாக 30 கருத்திட்டங்கள் அவதானிப்பட்டது.

அக் கள விஜயங்கள், அறிக்கை மற்றும் தரவுகளுக்கமைய கருத்திட்டங்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக திணைக்களத்தினால் விஷேட செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. விஷேடமாக 2022ம் வருடத்தில் காணப்பட்ட நெருக்கடி வாய்ந்த பொருளாதார நிலைமைக்கமைய அபிவிருத்தி கருத்திட்டங்களில் எழுந்த பிரச்சினைகளை தவிர்த்துக்கொள்வதற்காக அமைச்சரவைக்கு இத்திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவிற்கமைய "பாரிய அளவிலான அபிவிருத்தி கருத்திட்டங்களை மீண்டும் தந்திரோபாய முறைப்படுத்தும் மற்றும் விரைவுபடுத்தும் குழு" பொறிமுறை ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன், அதனூடாக 16 தடவைகள் நிரல் அமைச்சுக்களின் உத்தியோகத்தர்களுடன கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டு அனைத்து பாரியளவிலான அபிவிருத்தி கருத்திட்டங்க்ளும் (260) பின்வரும் அளவுகோல்களுக்கமைய மீளாய்வு செய்யப்பட்டு தீர்வு வழங்கப்பட்டுள்ளது.

- கருத்திட்டத்தின் ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம் 80% ஐ விட அதிகமெனில் அக்கருத்திட்டத்தினை மேலும் செயற்படுத்துவதற்குள்ள சாத்தியப்பாடு.
- பொருளாதாரத்திற்கு நேர்மறையான விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய மற்றும் விரைவாக பெறுபேற்றை வழங்கக்கூடிய முன்னணி கருத்திட்டங்கள்.
- கருத்திட்டங்களின் ஒவ்வொரு செயற்பாடுகள் அடைந்துகொண்டுள்ள முன்னேற்றம் மற்றும் கருத்திட்டத்தனை நிறைவு செய்வதற்கு அவற்றுக்கு காணப்படும் தொடர்பு.
- பாதியளவில் நிறைவு செய்யப்பட்டுள்ள செயற்பாடுகள்/ கருத்திட்டங்களை நிறைவு செய்யாமல் பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் ஏற்பாடுகளை பயன்படுத்தி முடிப்பதற்கு உள்ள இடைவெளி போன்றே பொருளாதாரம் வழமையான நிலைமைக்கு திரும்பும் வரை பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் குறைந்த செலவு மதிப்பீட்டின் கீழ் நடாத்தப்படுவதற்குள்ள சாத்தியப்பாடு.

- கருத்திட்டங்களுக்காக கடன் நிதியினை வழங்குவது தொடர்பான தற்போதைய நிலைமை மற்றும் கடன் நிபந்தனைகள்.
- இதுவரையில் மேற்கொள்ளப்பட்ட முதலட்டின் மதிப்பு, எதிர்கால மூலதனத் தேவை மற்றும் வழங்கப்படக் கூடிய மறுதிறத்தவர் நிதி ஒதுக்கீட்டின் அளவு.
- எதிர்கால செயற்படுகளுக்கு தேவையான எரிபொருள் உள்ளடங்களாக இறக்குமதி மூலப்பொருள் தேவைப்பாடு மற்றும் விநியோக கட்டுப்பாடுகள்.
- அந்நிய செலாவணி தேவைப்படும் ஒப்பந்த பிணைப்புக்கன் மற்றும் உள்நாட்டு ஒப்பந்தங்களில் காணப்படும் பிரச்சினைகள்.
- மூன்றாம் தரப்பு உடன்பாடுகள் மற்றும் அது தொடர்பான பிரச்சனைகள்.

2.2 கள அவதானிப்புக்கள்

1. கல்வி மற்றும் சுகாதார பிரிவு



சுகாதார துறை மேம்பாட்டு கருத்திட்டம் - கலென்பிதுனுவெவ



ஆரம்ப பராமரிப்பு நிறுவனம் - அம்பகஸ்வெவ

2. நீர் விநியோகம் மற்றும் மின்சக்தி பிரிவு



நீர் வழங்கல் மற்றும் சுகாதார மேம்பாட்டு கருத்திட்டம் - கலிகமுவ நகர்புற நீர் வழங்கல் திட்டம்



யாழ்ப்பாணம் கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் சுகாதார கருத்திட்டம்

3. போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரிவு





4. விவசாய மற்றும் நீரபாசன பிரிவு



மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டுத் நிகழ்ச்சித்திட்டம் - வேமடில்லா இடதுகரை பிரதான கால்வாய்



மகாவெலி நீர் பாதுகாப்பு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம - வயம்ப பிரதேச கால்வாய் கருத்திட்டம்

5. நகர்புற மற்றும் பிராந்திய அபிவிருத்தி பிரிவு



கொழும்பு மாநகர கழிவு நீர் முகாமைத்துவ கருத்திட்டம்



போக்குவரத்து இணைப்பு மற்றும் சொத்து முகாமைத்துவ கருத்திட்டம்

2.3 விசேட கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்களை நடாத்துதல்

புதிய நிதி ஆதாரங்கள், கட்டமைப்பு காரணங்கள், விரைவான அபிவிருத்தி தெரிவுகள் பற்றிய ஆலோசனைகள் மற்றும் புதிய கருத்திட்டத்தின் உட்பிரவேசத்தின் போது காணப்படும் கருத்திட்ட பிரச்சனைகளை ஆய்வு செய்வதற்கு போன்றே கருத்திட்டங்களை விரைவுபடுத்துவதனூடாக அரச முதலீட்டின் மூலம் எதிர்ப்பார்க்கப்பட்ட பெறுபேற்றை உரிய காலத்தில் உருவாக்கப்பட்டதனை உறுதிப்படுத்திக்கொள்வதனை நோக்கமாக கொண்டு இத்திணைக்களத்தினால் நிரல் அமைச்சின் உத்தியோகத்தர்கள்,கருத்திட்ட பணிப்பாளர்கள், ஒப்பந்தகாரர்கள், அபிவிருத்திப் பங்காளிகள் மற்றும் நிதி அமைச்சின் ஏனைய திணைக்களங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் உத்தியோகத்தகர்களின் பங்குபற்றலுடன் விஷேட கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்கள் நடாத்தப்படுகின்றது. மேலும், 2022 வருடத்தினை ஒட்டுமொத்தமாக கருத்திற்கொள்ளும் போது நாட்டினுள் நிலவிய நெருக்கடி வாய்ந்த பொருளாதார நிலைமையினால் ஏற்பட்ட போக்குவரத்து சிரமங்களின் காரணமாக

கூட்டங்களுக்கான பங்குபற்றல்களில் சிக்கல்கள் காணப்பட்டதனால் பெரும்பாலான கூட்டங்கள்/கலந்துரையாடல்கள் நிகழ்நிலை முறைமையினூடாக நடாத்தப்பட்டன.

அட்டவணை இல 2.2 : கள விஜயங்களினூடாக முன்னேற்றங்களை கண்காணித்தல் (2022.01.01இலிருந்து2022.12.31திகதி வரை)			
பிரிவு/ துறை	**கள அவதானிப்புக்களுக்காக திட்டமிடப்பட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கை**	**கள அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கை**	**சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்ட கண்காணிப்பு அறிக்கைகளின் எண்ணிக்கை**
நீர் விநியோகம் மற்றும் மின்சக்தி	62	2	2
விவசாயம் மற்றும் நீர்பாசனம்	41	1	1
கல்வி மற்றும் சுகாதாரம்	58	19	3
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள்	24	3	3
பிரதேச, மாகாண அபிவிருத்தி மற்றும் அரச நிர்வாகம்	37	4	4
நிதி மற்றும் கைத்தொழில்	35	1	1
மொத்தம்	**257**	**30**	**14**

அதற்கமைய இத்திணைக்களத்தினூடாக ஏனைய நிறுவனங்களின் உத்தியோகத்தர்களின் பங்குபற்றுதலுடன் 39 விஷேட கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன் அதனூடாக அபிவிருத்தி கருத்திட்டங்களை ஆரம்பிப்பதன் ஆரம்ப நடவடிக்கைகள், இடங்களை சுவீகரித்துக்கொள்வதற்கான நடவடிக்கைகளை விரைவுபடுத்தல், கேள்வி நடைமுறைகளை விரைவுபடுத்தல் மற்றும் நிறுவனங்களுக்கிடையேயான சிக்கல்களை தீர்த்தல் ஆகிய செயற்பாடுகளை முறைமைப்படுத்துவதற்கு மற்றும் செயற்றிறன் மிக்க வகையில் செயற்படுத்துவதற்கு தேவையான கருத்துக்கள் மற்றும் பரிந்துரைகளை வழங்குவதனூடாக தொடர்ச்சியாக வசதிகள் வழங்கப்பட்டன.

2022.09.05 திகதியில் நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தின் போது பிரதம மந்திரியின் செயலாளரின் தலைமையில் நியமிக்கப்பட்ட பாரிய அளவிலான அபிவிருத்தி கருத்திட்டங்களை மறு சீரமைத்தல் மற்றும் விரைவுபடுத்தும் உத்தியோகத்தர் குழுவினால் (RAMP) 2022 செப்டெம்பர் மாதத்திலிருந்து 261 பாரியளவிலான அபிவிருத்தி கருத்திட்டங்கள் அனைத்து பங்குதாரர்களினதும் பங்குபற்றலுடன் மீளாய்வு செய்யப்பட்டன. அங்கு, நிலவும் நெருக்கடியான பொருளாதார நிலைமையினுள் உருவாக்கூடிய சிரமங்களை கருத்திற் கொண்டு அளவுகோல்களின் அடிப்படையில் அக்கருத்திட்டங்களின் எஞ்சியுள்ள செயற்பாடுகள் தொடர்பாக கூட்டு முடிவுகள் எட்டப்பட்டன. குழுவினால் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் அவ் அவ் அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் அவை செயற்படுத்தப்படுவது தொடர்பாக பின்னூட்டல்கள் பெறப்பட்டு வருகின்றன.

அட்டவணை இல 2.3: கலந்துரையாடல்கள் மற்றும் விஷேட கூட்டங்கள் நடாத்தப்பட்டதன் முன்னேற்றம் (2022.01.01 இலிருந்து 2022.12.31 திகதி வரை)	
கூட்டங்கள்/கலந்துரையாடல்களின் வகைகள்	**எண்ணிக்கை**
கருத்திட்ட பிரச்சினைகள் தொடர்பாக நிரல் அமைச்சுக்கள், கருத்திட்ட முகாமைத்துவ அலகுகள் மற்றும் இத்திணைக்களத்துடன் நடாத்தப்பட்ட விஷேட கூட்டங்கள்	21
பாரிய மற்றும் பெரியளவிலான கருத்திட்டங்களை விரைவுபடுத்துவதற்கான குழு (RAMP) கூட்டங்கள்	16
நிதி வழங்கும் நிறுவனங்களுடனான மீளாய்வுக் கூட்டங்கள்	04
முன்னேற்ற மீளாய்வு கூட்டங்கள்	55
துறைசார் கூட்டங்கள்	16
அபிவிருத்திப் பங்குதாரர்களுடனான கூட்டங்கள்	27
கருத்திட்ட கண்காணிப்புக் குழு/கருத்திட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள்	44
வேறு விசேட கூட்டங்கள் / கலந்துரையாடல்கள்	51
மொத்தம்	**234**

அவ்வாறே, சில பாரியளவிலான அபிவிருத்தி கருத்திட்டங்கள் கால நீடிப்பை பெற்றுக்கொண்டிருந்தாலும் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேற்றை அடைந்துகொள்வதற்கு முடியாமல் போகும் சந்தர்ப்பங்கள் காணப்படுவதனால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை தீர்ப்பது தொடர்பாக தந்திரோபாய தீர்மானங்களை எடுப்பதற்கு மற்றும் விரைவாக பதிலளிக்கக்கூடிய நிலையான முறைமையின் தேவைப்பாடு அவதானிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய 2022.12.05 திகதியில் நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கமைய தேசிய செயற்பாட்டு மையமொன்று (NOR) கருத்திட்ட முகாமைத்துவ மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தின் கீழ் ஸ்தாபிப்பதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இத் தேசிய செயற்பாட்டு மையத்திற்கு சமர்ப்பிக்கப்படும் பிரச்சனைகள் சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பது தொடர்பாக பிரதம மந்திரியின் செயலாளரின் தலைமையில் 11 உத்தியோகத்தர்கள் உள்ளடங்கிய குழுவொன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன் பாரியளவிலான அபிவிருத்தி கருத்திட்டங்களை மறு சீரமைத்தல் மற்றும் விரைவுபடுத்தும் உத்தியோகத்தர் குழுவின் பணிகள் எதிர்காலத்தில் இத்தேசிய செயற்பாட்டு மையத்தினூடாக செயற்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2.4 அபிவிருத்திப் பங்காளிகளுக்கு வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தல்

அபிவிருத்தி கருத்திட்டங்களை செயற்படுத்தும் போது அபிவிருத்தி பங்காளிகளுக்கு வசதிகளை ஏற்படுத்துவோர்களின் கடமைகள் இத்திணைக்களத்தின் வருடாந்த நிகழ்ச்சித்திட்டத்தில் காணப்படும் பிரதான கூறாகும். அபிவிருத்திப் பங்காளிகள் ஆறு பேருடன் வருடாந்தம் நடாத்தப்படும் மீளாய்வு செயற்பாட்டினூடாக கருத்திட்டங்களை விரைவுபடுத்துவனூடாக எதிர்பார்க்கப்படும் அபிவிருத்தி பெறுபேற்றை உரியகாலத்தில் அடைந்துகொள்வது உறுதிப்படுத்தப்படுகின்றது.

அதற்கமைய, 2022 வருடத்தில் ஆசிய அபிவிருத்தி (ADB) மற்றும் உலக வங்கி (WB) நிதியுதவியின் அடிப்படையில் செயற்படுத்தப்படும் 50 கருத்திட்டங்களின் முன்னேற்ற

மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதனூடாக கருத்திட்டங்களில் காணப்படும் சவாலான பிரச்சினைகளை உரிய அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு செல்லுவதனூடாக பயனுறுதிமிக்க கருத்திட்ட முகாமைத்துவத்திற்கு பங்களிப்பு செய்யப்பட்டுள்ளன. சமகாலத்தில் உருவாகிய பொருளாதார நெருக்கடியின் முன் உருவாகியுள்ள சிக்கலான பிரச்சினைகள் காரணமாக திட்டமிடப்பட்ட முறையில் ஏனைய அபிவிருத்திப் பங்காளிகளுடன் அபிவிருத்தி கருத்திட்ட மீளாய்வுகளை நடாத்துவதற்கு முடியாமற்போனது.

2.5 தேசிய மதிப்பீட்டு கொள்கையினை செயற்படுத்துவதன் சட்டகத்தை உருவாக்குவதன் முன்னேற்றம்

பல்வேறு நிறுவனங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் உயர் அரச உத்தியோகத்தர்களின் தலையீட்டுடன் மதிப்பீட்டு கொள்கையினை தயாரிப்பது தொடர்பாக தேசிய கண்காணிப்பு குழு ஒன்றினை நியமித்து அதனது வழிகாட்டல் மற்றும் ஒத்துழைப்புடன் இத்திணைக்களத்தினால் 2019ம் வருடத்தில் தேசிய மதிப்பீட்டு கொள்கை தயாரிக்கப்பட்டு கௌரவ பிரதமரின் தலைமையில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

எவ்வாறாயினும், இத் தேசிய மதிப்பீட்டு கொள்கையினை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான வழிகாட்டுதல்கள், தரநிலைகள், மதிப்பீட்டு நெறிமுறைகள், நிறுவன கட்டமைப்புக்கள், மதிப்பீட்டு நிகழ்ச்சி நிரல், விதிமுறை மூலோபாய அணுகுமுறைகளை உள்ளடக்கி தேசிய மதிப்பீட்டு கொள்கையை நடைமுறைப்படுத்தும் சட்டகத்தை தயாரிப்பதற்கான செயற்பாடுகள் அமைச்சரவையின் கட்டளைக்கமைய ஆரம்பிக்கப்பட்டது. மேற்குறிப்பிட்ட கண்காணிப்பு குழுவின் பரிந்துரையின் பேரில் திணைக்களத்தின் சிரேஸ்ட உத்தியோகத்தர்களினால் தேசிய மதிப்பீட்டு கொள்கையினை நடைமுறைப்படுத்தும் சட்டகத்தின் ஆங்கில மொழியில் பிரதி வரைவு செய்யப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் தற்போது சிங்கள மற்றும் தமிழ் மொழிகளுக்கு மொழிபெயர்க்கப்பட்டுள்ளதுடன் பதிப்பிட்டு வெளியிடுவதற்கான பணிகள் நிறைவு செய்யப்பட வேண்டியுள்ளன.

2.6 அபிவிருத்தி கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றங்களை பிரசுரித்தல்.

அபிவிருத்தி கருத்திட்டங்கள் மற்றும் வேலைத்திட்டங்களின் செயலாற்றுகை பற்றிய முன்னேற்ற அறிக்கைகள் இத்திணைக்களத்தின் பரிந்துரைகளுடன் அமைச்சரவைக்கு காலாண்டு அடிப்படையில் சமர்ப்பிக்கப்படுகின்றது. அதனுடன் அமைச்சரவையினால் வழங்கப்பட்ட தீர்மானங்களுடன் அனைத்து காலாண்டு முடிவடையும் போதும் அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு நிரல் அமைச்சுக்களின் கீழ் செயற்படுத்தப்படும் கருத்திட்டங்கள் பற்றி இத்திணைக்களத்தின் மதிப்பீடு மற்றும் பரிந்துரைகளை தெரிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அரச செலவினம் மற்றும் வளங்களின் செயற்றிறன் வினைதிறன் மிக்க பயன்பாடு பற்றிய தகவல்களை பொது மக்களுக்கு, சிவில் அமைப்புக்களுக்கு மற்றும் ஏனைய அக்கறையுடைய தரப்பினருக்கு இலகுவாக பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் உரிய முன்னெற்ற அறிக்கைகள் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் இணையத்தளத்தில் (www.treasury.gov.lk) வெளியிடப்பட்டுள்ளன.


அத்தியாயம் 3 – வருடத்தின் மொத்த நிதி செயற்றிறன்

3.1 பாதீட்டு தகவல்


2022 ஆம் ஆண்டுக்கான அனுமதி வழங்கப்பட்ட செலவு மதிப்பீடு மற்றும் 2022 வருடத்திற்கான செலவினம் வரைபு இலக்கம் 01 மற்றும் அட்டவணை 3.1 இனூடாக காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை இல 3.1:பாதீட்டு தகவல் (2021.12.31 திகதியில்) மூலதனம் மற்றும் மீண்டு வரும் செலவினம் - (ரூபா.மில்)		
வகை	**மதிப்பிடப்பட்ட செலவினம்**	**உண்மையான செலவினம்**
மீண்டுவரும் செலவினம்	89	82.59
மூலதன செலவினம்	38.5	0.2
மொத்தம்	**127.5**	**82.79**

வரைபு இல 3.1 : பாதீட்டு தகவல் - 2022.12.31 திகதியில்



3.2 வருடத்தின் திரண்ட நிதி செயற்றிறன்




2022 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான
நிதிச் செயலாற்றுகைக் கூற்று

(ரூபா)

உ.ஒ 2022	குறிப்பு	உண்மை நிலை 2022	2021	
-	வருமானப் பெறுகைகள்	-	-	
-	வருமான வரி	1 -	-	
-	உள்நாட்டு பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி	2 -	-	ஒரு-1
-	சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள்	3 -	-	
-	வரியில்லாத வருமானங்களும் முகமைகளும்	4 -	-	
-	மொத்த வருமானப் பெறுகைகள் (அ)	-	-	
-	வருமானமற்ற பெறுகைகள்	-	-	
-	நிலுவேறி பணிமுற்பணங்கள்	91,881,000	117,219,000	ஒரு-3
-	வைப்புகள்	58,240	740,202	ஒரு-4
-	முற்பணக் கணக்குகள்	8,294,955	6,218,320	ஒரு-5
-	ஏனைய மீதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள்		3,610,574	
-	மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)	100,154,195	127,788,096	
-	மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)	100,154,195	127,788,096	
-	திரைநேர்க்கான அனுமதி (ஈ)	12,532,054	13,650,704	
	நிகர வருமானம் கிடப்பவை மற்றும் வருமானம் அல்லாத கிடப்பவை உ = (இ)-(ஈ)	87,622,141	114,137,392	
	வழி : செலவினம்			
-	மீண்டுவரும் செலவினம்			
(60,000,000)	சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள்	5 63,547,021	60,687,762	
(19,500,000)	ஏனைய பொருட்கள் சேவைகள்	6 18,648,737	27,524,279	ஒரு-20இ
(500,000)	மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள்	7 394,142	490,082	
	கட்டுக் கொடுப்பனவுகள்	8 -	-	
-	ஏனைய மீண்டுவரும் செலவினம்	9 -	-	
(80,000,000)	மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ)	82,589,900	88,702,123	
	மூலதனச் செலவினம்			
-	மூலதன சொத்துக்களின் புனரமைப்பும், மேம்படுத்தலும்	10 -		
(38,250,000)	மூலதன சொத்துக்களின் கொள்வனவு	11 102,680	211,377	
-	மூலதன மாற்றல்கள்	12 -	-	ஒரு-20இ
-	நிதிச் சொத்துக்களின் கொள்வனவு	13 -	-	
(250,000)	நிரல் விருத்தி	14 93,000	148,000	
-	ஏனைய மூலதனச் செலவினங்கள்	15	17,574,566	
(38,500,000)	மொத்த மூலதனச் செலவினம் (எ)	195,680	17,933,943	
	வைப்புக் கொடுப்பனவுகள்	58,240	65,008	ஒரு-4
	முற்பணக் கொடுப்பனவுகள்	5,118,751	8,007,519	ஒரு-5
	ஏனைய நிரல மேலதிகச் செலவினம்	-	-	
	மொத்தமான மேலதிகச் செலவினம் (ஏ)	5,176,991	8,072,527	
	மொத்த செலவினம் ஐ = (ஊ+எ+ஏ)	87,962,570	114,708,593	
	ஒன்பர் 31 இல் உண்மையான மிகை ஒ = (உ-ஐ)	(340,429)	(571,201)	
	பணிமுற்பண இலக்கு அடிப்படையிலான மிகை	(340,429)	(571,201)	ஒரு-7
-	மூன்றாம் 31ல் உண்மையான பணிமுற்பண மிகை	-	-	ஒரு-3

3.3 நிதி நிலைமை கூற்று



ஏரிவு -வி

2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
நிதி நிலைமைக் கூற்று

	குறிப்பு	உள்ளவை நிலை 2022 ரூபா	2021 ரூபா
நிதி சொத்துக்கள் அற்று			
அதனல், பொறித் தொகுதி மற்றும் உபகரணம்	ஏரிவு-6	70,249,391	84,310,896
நிதி சொத்துக்கள்			
முற்பணம் கணக்குகள்	ஏரிவு-5/1ஏ	9,279,250	12,455,454
காசு மற்றும் காசுக்குச் சமனானவை	ஏரிவு-3	-	-
மொத்த சொத்துக்கள்		**79,528,641**	**96,766,350**
நெறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு			
நிலைபேற்கு நெறிய சொத்துக்கள்		9,279,250	11,779,280
அதனல், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம்		70,249,391	84,310,896
வட்டக் மற்றும் பணி முற்பண ஒதுக்கம்	ஏரிவு-5/1		
நடமுறைப் பொறுப்புக்கள்			
வைப்புக் கணக்குகள்	ஏரிவு-4		676,194
நிதிக்கப்படாத பணிமுற்பண நிதி	ஏரிவு-3	-	
மொத்தப் பொறுப்புக்கள்		**79,528,641**	**96,766,350**

பக்க இலக்கம் 01 முதல் 29 வரை ஏரிவு 1 முதல் ஏரிவு 7 வரையான பாதிரிப் படங்களின் முலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின் பக்க இலக்கம் 30 முதல் 37 வரை உள்ளடங்கியுள்ள முலை கணக்குக் குறிப்புகளின் பிரதமம் இந்த நிதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதிகாரவலயில் இங்கு நிதிக்கூற்றுக்களில் குறிப்புகளின் முலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேழுள்ள நிதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் நிலையேறு புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இதனால் சான்றுப்படுத்துகின்றோம்.

நிதி நிருவாகத்திற்காக விளைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அமைவதற்கு நிருவாகத்தின் காலப்படுகின்றது என்பதும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அவசியமாக அந்தத் தொகுதியை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அதற்கு மினங்குவதன் மேற்கொள்ளப்படுகின்றது என்பதும் இதனால் சான்றுப்படுத்துகின்றோம்.

பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர்:
பதவி:
திகதி:

கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர்:
பதவி:
திகதி: 22.05.2023


Ayanthi De Silva
Director General
Department of Project Management & Monitoring
General Treasury
Colombo 01.

பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர்/
பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)
பெயர்: 22.05.2023
திகதி:

K. Piratheepan
Director
Department of Project Management & Monitoring
General Treasury
Colombo 01

K.M.M. Siriwardana
Secretary to the Treasury and
Secretary to the Ministry of Finance,
Economic Stabilization and National Policies
The Secretariat
Colombo 01.

3.4 காசுப் பாய்ச்சல் கூற்று




ஏசிஎ- 8

2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
காசுப் பாய்ச்சல் கூற்று

உள்ளவை

	2022 ரூபா	2021 ரூபா
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
பொருத்த வரிப் பெறுகைகள்	-	-
கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டலைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள் இலாபம்	-	-
வருமானம் அல்லாத பெறுகைகள்	-	-
ஏனைய வருமான நிலைப்படுத்தலாக கேதிக்கப்பட்ட வருமானம்	3,774,815	3,610,574
நிலைக்கப்பெற்ற சட்டரீதி	91,801,000	117,219,000
முற்பணங்களை அறவிடல்	6,763,940	3,192,882
வைப்புக்களின் பெறுகை	58,240	740,202
செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)	102,397,995	124,762,658
கழி - பணித்துணிக்கப்பட்ட காசு		
ஆளுகைரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாட்டுத் கொடுப்பனவுகள்	82,157,438	88,205,541
வாகனங்களும் ஏற்றுக் கொடுப்பனவுகளும்	394,342	490,082
ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம்	1,941,691	280,000
நிலைசெர்க்குத் திக்கப்பட்ட பணிமுதனம்	12,532,054	13,650,704
முற்பணக் கொடுப்பனவு	5,118,751	4,137,380
வைப்புக் கொடுப்பனவு	58,240	65,008
தொழிற்பாடுகளுக்கு பணித்துணிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)	102,202,315	106,828,715
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான நேதிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)	195,680	17,933,943
முதலீட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
வ.உ	-	-
பங்கு இலாபம்	-	-
உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பொதுநிதி சொத்துக்களின் விற்பனை	-	-
உப வகுக்கள் பிரிவை அறவிடல்	-	-
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)	-	-
கழி - பணித்துணிக்கப்பட்ட காசு		
கொள்வனவு அல்லது பொதுநல் சொத்துக்களின் நிர்மாணிப்பு மற்றும் ஏனைய முதலீடுகளின் கொள்வனவு	195,680	17,933,943
முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)	195,680	17,933,943
	(195,680)	(17,933,943)
முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான நேதிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ)	(0)	-
தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான நேதிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ)+(ஊ)	-	-
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
உரிமைப் பங்குகள்	-	-
வெளிநாட்டுக் கடன்கள்	-	-
பெற்ற நன்கொடைகள்	-	-
நிதிச் நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)	-	-
கழி - பணித்துணிக்கப்பட்ட காசு		
உரிமைப் பங்குகள் மீதான நிகர் கொடுப்பனவுகள்	-	-
வெளிநாட்டுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
நிதிச் செயற்பாடுகளுக்கு பணித்துணிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)	-	-
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான நேதிய காசுப் பாய்ச்சல் (ஒ)=(ஏ)-(ஐ)	-	-
காசில் மற்றம், நேதிய தலைவு (ஓ)=(எ)+(ஒ)	-	-
ஜனவரி 01 ஆம் திகதியுள்ளவாறான ஆரம்ப காசு மீதி	-	-
டிசம்பர் 31ஆம் திகதியுள்ளவாறான இறுதிக் காசு மீதி	-	-

3.5 நிதி கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்



அறிக்கையிடலின் அடிப்படை

1) அறிக்கையிடல் காலப்பகுதி

இந் நிதிக் கூற்றுக்களுக்கான அறிக்கையிடல் காலப்பகுதி 2022 சனவரி 01 முதல் டிசம்பர் 31 வரையானதாகும்.

2) அளவீட்டுக்கான அடிப்படை

நிதிக்கூற்றுக்களானது, வரலாற்றுக் கிரய அடிப்படையிலேயே தயாரிக்கப்பட்டுள்ள அதேவேளையில், ஒரு சில சொத்துக்களின் வரலாற்றுக் கிரயம் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிக்கு மேம்படுத்தப்பட்டுள்ளது. வேறு விதத்தில் குறிப்பிடப்படாத போது கணக்கு தயாரிப்பு நடவடிக்கைகள் மேம்படுத்தப்பட்ட காசு அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

நிதிக் கூற்றுக்களிலுள்ள இலக்கங்கள் இலங்கை ரூபாவில் கிட்டிய ரூபாய்க்கு தயாரிக்கப்படல் வேண்டும்.

3) வருமானத்தை அடையாளங்காணுதல்

நாணயமாற்று மற்றும் நாணயமாற்று அல்லாத வருமானங்கள் அவை கிடைக்கக்கூடிய காலப்பகுதியை கவனத்திற்கொள்ளாது, காசு கிடைக்கக் கூடிய காலப்பகுதிக்குள் வருமானமாக அடையாளம் காணப்படுகின்றது.

4) சொத்து, இயந்திர மற்றும் உபகரணம் மதிப்பகற்சிய அங்கீகாரம் மற்றும் அளவீடு

சொத்துக்கள் நம்பகத்தந்த அடிப்படையில் அளவிடப்படுகின்றது மற்றும் நிறுவனத்தின் சொத்துக்கள் எதிர்கால பொருளாதார நலன்களுடன் தொடர்புபடுவதாக இருக்கின்றது என்பதற்கான நிகழ்தகவின் அடிப்படையிலேயே சொத்து, இயந்திரம் மற்றும் உபகரணங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன.

கிரயமுறை கொருத்தமில்லாத சந்தர்ப்பத்திலேயே சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்கள் கிரயம் மற்றும் மறுமதிப்பீட்டு முறையில் அளவீடு செய்யப்படுகின்றது.

5) சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்களின் ஒழுக்கம்

இந்த மீள்மதிப்பு ஒதுக்கீட்டுக் கணக்காது சொத்து, இயந்திர மற்றும் உபகரண கணக்கின் தொடர்புபட்டதாகும்.

6) காசு மற்றும் காசுக்கு சமமானவை

காசு மற்றும் காசுக்கு சமமானவை 2022 டிசம்பர் 31 இல் உள்ள உரிமைப்பட்ட நாணயத்தாள்கள் மற்றும் நாணயங்களை உள்ளடக்கியதாகும்.

7) நிதிக் கூற்றுக்களுக்கான பழைகளில் மாற்றங்களும் ஒப்பீட்டுரீதியான புள்ளிவிபரங்களை சரிசெய்தலும்

2022 ஆம் ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்களில் செய்யப்பட்ட மாற்றங்களுக்கு அமைவாக 2021 ஆம் ஆண்டுக்கான ஒப்பீட்டுரீதியான புள்ளிவிபரங்களில் மாற்றங்கள் செய்யப்பட் டுள்ளன.

7

3.6 வருமான சேகரிப்பு செயலாற்றுகை.

இத்திணைக்களம் வருவாய் சேகரிக்கும் திணைக்களம் அல்ல.

அட்டவணை இல. 3.2 வருமான சேகரிப்பு செயலாற்றுகை

ரூபா. '000

வருமான குறியீடு	வருமான குறியீடு விபரம்	வருமான மதிப்பீடு		சேகரிக்கப்பட்ட வருமானம்	
		அசல் மதிப்பீடு	இறுதி மதிப்பீடு	தொகை (ரூ)	இறுதி வருமான மதிப்பீட்டின் சதவீதமாக%
இத்திணைக்களம் வருவாய் சேகரிக்கும் திணைக்களம் அல்ல.					

3.7 ஒதுக்கீட்டு பயன்பாட்டின் செயலாற்றுகை

அட்டவணை இல 3.3 ஒதுக்கீட்டு பயன்பாட்டின் செயலாற்றுகை

ரூபா. '000

ஒதுக்கீட்டு வகை	ஒதுக்கிடப்பட்ட நிதி		உண்மையான செலவினம்	பயன்பாடு,இறுதி ஒதுக்கீட்டின் % ஆக
	அசல் ஒதுக்கீடு	இறுதி ஒதுக்கீடு		
மீண்டவரும்	89,000,000	89,000,000	82,589,900	92.80
மூலதன	38,500,000	38,500,000	195,680	0.51

3.8 நி.பி .குறிப்பு 208 பிரகாரம் ஏனைய அமைச்சுக்கள்/ திணைக்களங்களின் முகவராகஇத்திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட ஒதுக்கீடு

அட்டவணை இல. 3.4

ஏனைய அமைச்சுக்கள்/ திணைக்களங்களின் முகவராக இத்திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட ஒதுக்கீடு

ரூ. '000

தொடர் இல.	நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்ட அமைச்சு/ திணைக்களம்	ஒதுக்கீட்டின் நோக்கம்	ஒதுக்கீடு		உண்மையான செலவினம்	இறுதி ஒதுக்கீட்டின் % ஆக வழங்கப்பட்ட ஒதுக்கீட்டுப் பயன்பாடு
			அசல் ஒதுக்கீடு	இறுதி ஒதுக்கீடு		
01	பொது நிர்வாகம், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சு	அபிவிருத்தி உத்தியோகத்தர் சம்பளம்	2,363,440	2,363,440	1,941,691	82%

3.9 நிதி அல்லாத சொத்து அறிக்கையிடல் செயலாற்றுகை

அட்டவணை இல. 3.5 நிதி அல்லாத சொத்து அறிக்கையிடல் செயலாற்றுகை ரூ. '000					
ஆதன குறியீடு	குறியீட்டு விபரம்	31.12.2022 திகதிக்கு சொத்து மீளாய்வு அறிக்கைக்க மைய மீதி	31.12.2022 திகதியில் நிதி நிலைமை அறிக்கையின்படி மீதி	எதிர்காலத்தில் கணக்கிட வேண்டியது	அறிக்கையிடல் முன்னேற்றம் மூ
9151	கட்டிடம் மற்றும் கட்டமைப்பு	-	-	-	
9152	இயந்திரம் மற்றும் உபகரணம்	70,249,390.52	70,249,390.52	-	100%
9153	காணி	-	-	-	
9154	அருவச் சொத்துக்கள்	-	-	-	
9155	உயிரியல் சொத்துக்கள்	-	-	-	
9160	குறை வேலைகள்	-	-	-	
9180	குத்தகைச் சொத்துக்கள்	-	-		

3.10 கணக்காய்வாளர் அறிக்கை

** ** பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கும் போது, கணக்காய்வாளரினால் வெளியிடப்பட்ட இறுதி கணக்காய்வு அறிக்கையானது ஸ்கேன் செய்யப்பட்டு(SCAN) இங்கே சேர்க்கப்பட்டுள்ளது.

அத்தியாயம் 04- செயலாற்றுகை குறிகாட்டிகள்

4.1 நிறுவனத்தின் செயலாற்றுகை குறிகாட்டிகள் (செயற்பாட்டுத் திட்ட அடிப்படையில்)

அட்டவணை இல 4.1 : நிறுவனத்தின் செயலாற்றுகை குறிகாட்டிகள் (2022.12.31 திகதியில்)

விஷேட குறிகாட்டிகள்	உண்மையான வெளியீடு (%) எதிர்பார்த்த வெளியீட்டின் சதவீதமாக		
	100%- 90%	75% -89%	50%-77%
முன்னேற்றங்கள் மீளாய்வு செய்யப்பட்ட கருத்திட்ட மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை	√		
தீர்மானங்களை மேற்கொள்வதற்காக உரியகாலத்தில் வழங்கப்பட்ட கண்காணிப்பு அறிக்கைகளின் எண்ணிக்கை	√		
பிரச்சனைகளை தீர்ப்பதற்காக வெளிநாட்டு நிதியுதவியளிக்கும் நிறுவனங்களுடன் நடாத்தப்பட்ட முன்னேற்ற மீளாய்வு கூட்டங்களின் எண்ணிக்கை			√
மேற்கொள்ளப்பட்ட களவிஜயம் மற்றும் அடையாளம் காணப்பட்ட பிரச்சினைகளின் எண்ணிக்கையும்			√
தேசிய மதிப்பீட்டு கொள்கை கட்டமைப்பின் உருவாக்கல் மட்டம்.்.நிலை	√		
